2007 ஏப்ரல் 24]

இருக்கக்கூடிய ஆணையர் மட்டும்தான் தமிழ்நாடு மின்சார வாரியத்திற்குத் தேவையான நிலத்தை இலவசமாகவே கொடுப்பதாக வாக்குறுதி தந்திருக்கிறார்கள்.

முற்பகல் 9-40

அறநிலையத் துறையைச் சேர்ந்தவர்கள், guideline value அல்லது market value, இந்த இரண்டில் எது அதிகமோ, அந்த விலை கொடுப்பதாக இருந்தால், அவர்கள் அந்த நிலத்தைக் கொடுப்பதாக வாக்குறுதி தந்திருக்கிறார்கள். ஆனால், மாவட்ட ஆட்சித் தலைவர்களைப் பொறுத்தவரையில் எங்கேயாவது அரசாங்க நிலம் இருந்தால் அதை நாங்கள் உடனடியாகக் கொடுக்க முடியும் என்றும், நிலம் இல்லையென்று சொன்னால் தனியாரிடத்திலேயிருந்துதான் வாங்கித் தர வேண்டுமென்றும் சொல்லி இருக்கிறார்கள். எனவே, நிலம் வாங்கித் தருவதிலேதான் பிரச்சினை இருக்கிறதே தவிர, துணை மின் நிலையம் அமைப்பதிலே எந்தவிதமான பிரச்சினையும் கிடையாது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 122, மாண்புமிகு உறுப்பினர் திரு. ம.அ. கலீலுர் ரஹ்மான், மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

122—

உழவர் சந்தை

***989—திரு. ம.அ. கலீலுர் ரஹ்மான்:**

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரவக்குறிச்சி தொகுதியில் பரமத்தி, தென்னிலை, சின்னதாராபுரம், தாந்தோணி, அரவக்குறிச்சி, பள்ளப்பட்டி ஆகிய ஊர்களில் உழவர் சந்தை அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) கரூர் மாவட்டத்தில் கரூர், குளித்தலை மற்றும் வேலாயுதம்பாளையம் ஆகிய இடங்களில் உழவர் சந்தைகள்

[2007 ஏப்ரல் 24

செயல்பட்டு வருகின்றன. தற்போதைய நிலையில் பரமத்தி, தென்னிலை, சின்னதாராபுரம், தாந்தோணி, அரவக்குறிச்சி மற்றும் பள்ளப்பட்டி ஆகிய இடங்களில் உழவர் சந்தைகள் தொடங்கும் கருத்துரு எதுவும் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ம.அ. கலீலுர் ரஹ்மான்.

திரு. ம.அ. கலீலுர் ரஹ்மான்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது அரவக்குறிச்சி தொகுதியில் எந்த ஓர் இடத்திலும் உழவர் சந்தை என்பதே இல்லை. பள்ளப்பட்டியைப் பொறுத்தவரை, அதன் சுற்று வட்டாரங்களிலே கிராமங்கள் அதிகமாக உள்ளன. விவசாயப் பெருங்குடி மக்கள் அதிகமாக வாழ்கின்றனர். அவர்கள் விவசாயம் செய்யக்கூடிய காய்கறி பள்ளப்பட்டியில் அதிகம் விற்கப்படுவதற்கு நிறைய வாய்ப்புகள் உள்ளன. பள்ளப்பட்டி பேரூராட்சியைப் பொறுத்தவரை அங்கே உழவர் சந்தை அமைப்பதற்கு, நிலம் தருவதற்குப் பேரூராட்சி நிருவாகம் தயாராக உள்ளது. ஆகவே, பள்ளப்பட்டியிலாவது உழவர் சந்தையை அமைப்பதற்கு அரசு முன்வருமா? மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதற்கு ஆவன செய்வார்களா என்று தங்கள் வாயிலாக நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே தமிழகத்தில் 103 உழவர் சந்தைகள் நடைபெறுகின்றன. மேலும், பல்வேறு மாவட்டங்களிலேயிருந்து உழவர் சந்தைகள் தொடங்க வேண்டுமென்ற கோரிக்கைகள் வந்து, அவை பற்றி ஆய்வு செய்ததிலே, 50 இடங்களில் நடப்பாண்டிலே தொடங்கலாம் என்று நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்ததைப்போல பள்ளப்பட்டியில் உழவர் சந்தை தொடங்க இடம் இருக்குமானால் அதனை எழுத்துபூர்வமாகத் தந்தால், துறைக்கு அனுப்பி அதைப் பற்றிப் பரிசீலிக்கலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ம.அ. கலீலுர் ரஹ்மான்.

2007 ஏப்ரல் 24]

திரு. ம.அ. கலீலுர் ரஹ்மான்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. தி. வேல்முருகன்.

திரு. தி. வேல்முருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உழவர் சந்தைகள் எங்கும் மிகச் சிறப்பாகச் செயல்பட வேண்டுமென்பதற்காகத் தொடங்கப்பட்டு, குறிப்பாக என்னுடைய பண்ருட்டி தொகுதியில் நம்முடைய முத்தமிழறிஞர் முதல்வர் அவர்கள் ஆட்சிக் காலத்தில் தொடங்கப்பட்டு, முதலில் உழவர்கள் 15 நபர்கள் வருகை தந்தார்கள். தற்போது 7 நபர்களாக ஆகி, இப்போது ஒருவர்கூட வர முடியாமல் அது மூடப்படுகின்ற ஒரு நிலைமைக்குத் தள்ளப்பட்டிருக்கிறது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள்—உழவர்கள் பயனடைகின்ற வகையில் பண்ருட்டி பேருந்து நிலையம் அருகே, பொது மக்கள் கூடுகிற இடத்தில் விவசாயிகள் வந்து பொருட்களை விற்பனை செய்வதற்கு ஏதுவான இடத்தில் அந்த உழவர் சந்தையை மாற்றி அமைப்பதற்கு அரசு முன்வருமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பண்ருட்டி பற்றித்தானே சொல்கிறீர்கள்? (குறுக்கீடு) பண்ருட்டியிலே தொடங்குகிறபோது அந்த இடம்தான் உழவர் சந்தை தொடங்குவதற்குக் கிடைத்தது. அது தொடங்கப்பட்டு சிறப்பாக நடைபெற்றது. பிறகு இடையிலே, அந்த 103 உழவர் சந்தைகளுமே எப்படி முடக்கப்பட்டன என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அறிவார்கள். ஆனால், இப்போது ஆட்சிப் பொறுப்பு ஏற்றதும் நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய உத்தரவின்பேரில் 103 உழவர் சந்தைகளும் புதுப்பிக்கப்பட்டு இப்போது சிறப்பாகச் செயல்படுகின்றன. பண்ருட்டியிலே இருக்கக்கூடிய உழவர் சந்தைக்கு இடம் சரியில்லை, அதனால், பொது மக்கள் வந்து செல்வதற்கு வாய்ப்புக் குறைவாக இருக்கிறது என்று மாண்புமிகு உறுப்பினர் கருதுவாரேயானால், பொது மக்கள் கூடக்கூடிய அல்லது விவசாயிகள் வருவதற்கு ஏற்ற இடமாகப் பார்த்து இடம் கொடுத்தால், அதைப் பற்றிப் பரிசீலிக்கலாம்.

முற்பகல் 9-45

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். பன்னீர்செல்வம்.

திரு. எம். பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சீர்காழி தொகுதியில், சீர்காழி நகரில் உழவர் சந்தை அவசியமாக அமைக்கப்பட வேண்டும். சீர்காழி தொகுதியிலே நிறைய காய்கறிகள் உற்பத்தி செய்யப்படுகின்றன. கொள்ளிடம் ஊராட்சி ஒன்றியத்திலே இருக்கக்கூடிய சந்தப்படுகை, திட்டுப்படுகை, முதலைமேடு, முதலைமேடுதிட்டு, கோதண்டபுரம், இன்னும் சீர்காழி ஒன்றியத்திலே இருக்கக்கூடிய அல்லிவிளாகம், செம்பதனிருப்பு ஆகிய பகுதிகளிலே காய்கறிகள் அதிகமாக உற்பத்தி செய்யப்படுகின்றன. எனவே, சீர்காழி தொகுதி, சீர்காழி நகரிலே உழவர் சந்தை அமைக்கப்படுமா என்று தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உழவர் சந்தை அமைப்பது, மாண்புமிகு உறுப்பினர் இங்கே சொன்னதைப்போல, காய்கறிகள் உற்பத்தியாகின்ற இடமாகவும் இருக்க வேண்டும், அதே நேரத்தில், அப்படியொரு உழவர் சந்தை தொடங்கினால், நுகர்வோர்கள் தேவையான அளவிற்கு அங்கு இருந்தால்தான், அந்தச் சந்தைக்குக் கொண்டு வரக்கூடிய காய்கறிகள் விற்பனையாகும். ஆகவே, நுகர்வோர்களையும் கருத்திலேகொண்டுதான் உழவர் சந்தை தொடங்கப்படுகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 123, மாண்புமிகு உறுப்பினர் திரு. போ. சின்னப்பன், மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் அவர்கள்.

123—

தூர் வாருதல்

***8369—திரு. போ. சின்னப்பன்:**

மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—